**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

**அனுப்புநர்**
திரு. தயாணந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்
சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்**
1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
2) அனைத்து செயற்பதிவாளர்கள்.

ந.க : 1285/2022/கூ.தே.3 நாள் : 16.11.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் – தேர்தல் அறிவிப்பு (Notification) செய்த பின்னர் தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள இடங்களை சட்ட விதிகளுக்கு முரணாக மாற்றுதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

****

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களுக்கான 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள், விதி எண்.52(5)(a)ன் கீழ் வழங்கப்படும் தேர்தல் திட்டங்களில், மாவட்டத் தேர்தல் அலுவலர்களால் வெளியிடப்படும் தேர்தல் அறிவிப்பில் (Notification) விதி எண்.52(6)(a) (iii), (iv) மற்றும் (v) ல் கூறப்பட்டுள்ளபடி வேட்புமனு, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகை ஆகிய நடவடிக்கைகளுக்கான இடம் அறிவிப்புச் செய்யப்படுகிறது.

சில தருணங்களில் ஏற்கெனவே அறிவிப்புச் செய்யப்பட்ட இடங்கள் கிடைக்கவில்லை என்றோ அல்லது இடங்கள் பற்றி வேறு பல காரணங்களைக் கூறியோ அறிவிக்கப்பட்டுள்ள சங்கத் தேர்தல் நடவடிக்கை தேர்தல் அலுவலர்களால் நிறுத்தப்பட்டுள்ளது. இம்மாதிரி நிறுத்தங்களுக்கு தேர்தல் அலுவலர்களுக்கு எவ்வித சட்டபூர்வ அதிகாரமும் வழங்கப்படவில்லை. விதி எண்.52(18)(a)–ல் சொல்லப்பட்டதற்கு இது முற்றிலும் முரணானதாகும். இதுபற்றி மாண்பமை நீதிமன்றங்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

எனவே இம்மாதிரியான நிகழ்வுகள் இனிவரும் காலங்களில் ஏற்படாது தடுத்திட கீழ்வரும் அறிவுரைகளை ஆணையம் வழங்குகிறது:



Scanned with OKEN Scanner

1) மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பில் அறிவிக்கப்பட்ட இடங்களை (Notified place) எந்தச் சூழ்நிலையிலும் மாற்றுவது கூடாது.

2) மிக மிக தவிர்க்க முடியாத இனங்களில் (Compelling and special reasons) ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இடங்களில் தேர்தல் நடவடிக்கைகள் எவ்வகையிலும் மேற்கொள்ள இயலாது என்று உறுதியாகத் தெரிந்தால் மட்டுமே ஆணையத்தின் முன் அனுமதி பெற்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இடத்திற்குப் பதிலாக மாற்று இடம் அறிவிக்கலாம்.

3) இவ்வாறு இடம் மாற்றம் செய்யப்படும் நிகழ்வுகளில் அவ்விபரத்தை சங்க வாக்காளர்கள் நன்கு அறிந்திடும் வகையில் சங்க அறிவிப்பு பலகையிலும் மற்றும் பொது இடங்களிலும் அறிவிப்புச் செய்தல், தேவைப்படும் நேர்வுகளில் நாளிதழில் வெளியீடு செய்தல் போன்ற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்த அறிவுரைகளை தங்களது நிர்வாக கட்டுப்பாட்டிற்குட்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தவறாது தெரிவித்திடவும் அவ்விபரத்தை ஆணையத்திற்கு கூடிய விரைவில் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

16/4/22

ஆணையருக்காக

நகல் :

1) அரசு முதன்மைச் செயலாளர்,
கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.
சென்னை – 9.
2) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
3) இருப்புக் கோப்பு 2022.



Scanned with OKEN Scanner